©
GOVERNMENT OF TAMIL NADU
2017

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**PUBLISHED BY AUTHORITY**

No. 43] CHENNAI, WEDNESDAY, OCTOBER 25, 2017
Aippasi 8, Hevilambi, Thiruvalluvar Aandu–2048

## Part II—Section 1

**Notifications or Orders of specific character or of particular interest to the public issued by Secretariat Departments.**

### NOTIFICATIONS BY GOVERNMENT

### CONTENTS

பக்கங்கள்.

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை**

ஆட்சி எல்லை – திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டத்திலுள்ள புத்தனாம்பட்டி, வெள்ளக்கல்பட்டி, அபினிமங்கலம் மற்றும் கோட்டத்தூர் ஆகிய வருவாய் கிராமங்களை மீண்டும் துறையூர் வட்டத்துடன் இணைத்தல் .. .. 156

## NOTIFICATIONS BY GOVERNMENT

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை**

*தலைமைச் செயலகம், 2017 அக்டோபர் 25.*

No.II(1)/REV/29/2017.

[ஆட்சி எல்லை – திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டத்திலுள்ள புத்தனாம்பட்டி, வெள்ளக்கல்பட்டி, அபினிமங்கலம் மற்றும் கோட்டாத்தூர் ஆகிய வருவாய் கிராமங்களை மீண்டும் துறையூர் வட்டத்துடன் இணைத்தல்–ஆணை வெளியிடப்படுகிறது.]

கீழ்க்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது:–

*[அரசாணை (நிலை) எண். 310, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வருவாய் நிருவாக அலகு, [வ.நி. 1(1)] பிரிவு, 25 செப்டம்பர் 2017, புரட்டாசி 9, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2048.]*

படிக்கவும்:–

1. திரு. தங்கவேலு, புத்தனாம்பட்டி அவர்களின் மனு நாள் 04–01–2016.
2. சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை W.P.(MD) No. 40156/2016, நாள் 16–11–2016.
3. மாவட்ட ஆட்சியர், திருச்சிராப்பள்ளி அவரிகளின் கடித ந.க.4/22250/2016, நாள் 22–05–2017.
4. முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் கடித ந.க.பணி6(3)/9078/2017, நாள் 14–07–2017.

**ஆணை. எண்.310, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வருவாய் நிருவாக அலகு, [வ.நி.1(1)] பிரிவு.**

மேலே பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட மனுவில் திரு. தங்கவேலு அவர்கள் திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டத்திலுள்ள புத்தனாம்பட்டி, வெள்ளக்கல்பட்டி, அபினிமங்கலம் மற்றும் கோட்டாத்தூர் ஆகிய வருவாய் கிராமங்களை மீண்டும் துறையூர் வட்டத்தில் இணைக்கும்படி அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

**2.** இதற்கிடையில் திரு. தங்கவேலு அவர்கள் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடுத்திருந்த நீதிப்பேராணையில் W.P.(MD) No. 40156/2016, மேற்படி நீதிமன்றம் பார்வை இரண்டில் படிக்கப்பட்ட தீர்ப்புரையில் திரு. தங்கவேலு அவர்களின் 04–01–2016 தேதியிட்ட மனுவினை தீர்ப்புரை கிடைக்கப்பெற்ற மூன்று மாதத்திற்குள்ளாக இரண்டாவது பிரதிவாதியான அரசு செயலாளர், வருவாய்த் துறை அவர்கள் முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என உத்தரவிட்டது.

**3.** திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர், பார்வை மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டம், புலிவலம் குறுவட்டம், கோட்டாத்தூர், புத்தனாம்பட்டி, அபினிமங்கலம், வெள்ளக்கல்பட்டி ஆகிய வருவாய் கிராமங்கள் 1995–க்கு முன்னர் ஒருங்கிணைந்த மாவட்டமான திருச்சியிலிருந்து பின்னர் திருச்சி, கரூர், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களாக பிரிக்கப்பட்டபோது, துறையூர் வட்டத்திலேயே இருந்தன என்றும், மறு சீரமைப்பின்போது மேற்படி கிராமங்கள் முசிறி வட்டத்துடன் இணைக்கப்பட்டன என்றும், இக்கிராமங்களில் வசித்துவரும் பொதுமக்கள் முசிறி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வரும் பயண தொலைவு 40 கி.மீ. ஆகும் என்றும், இவர்கள் துறையூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு செல்லும் பயண தொலைவு 15 கி.மீ. ஆகும் என்றும், மேற்கண்ட கிராமத்தை சேர்ந்த பொதுமக்கள் முசிறிக்கு வருவது என்றால் புலிவலம் வந்து முசிறிக்கு வந்துசேர வேண்டும் அல்லது துறையூர் சென்று பின்னர் முசிறி வந்து சேர வேண்டும் என்றும் எனவே, பொது மக்கள் அலுவலக நிமித்தமாக முசிறி வட்ட தலைமையிடத்திற்கும், முசிறி ஊராட்சி ஒன்றிய தலைமையிடத்திற்கு வரும் பயண நேரம், பயணதூரம் மற்றும் பயணச் செலவு ஆகியவற்றை ஒப்பிடும்போதும் துறையூர் செல்வதே பொதுமக்களுக்கு சாலச் சிறந்ததாக இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

**4.** மேலும், கோட்டாத்தூர், புத்தனாம்பட்டி, அபினிமங்கலம், வெள்ளக்கல்பட்டி ஆகிய வருவாய் கிராமங்கள் முசிறி ஊராட்சி ஒன்றியத்திலும், துறையூர் சட்டமன்ற தொகுதியிலும், பெரம்பலூர் பாராளுமன்ற தொகுதியிலும் அமைந்துள்ளன என்றும், மேற்கண்ட கிராமங்களை துறையூர் வட்டத்துடன் இணைத்து மறு சீரமைக்கும் பட்சத்தில் தொடர்ந்து துறையூர் சட்டமன்றத் தொகுதிக்கும், பெரம்பலூர் பாராளுமன்ற தொகுதிக்கும் உட்பட்டதாக இருக்கும் என்றும், இதனால் மாவட்டம் மற்றும் வருவாய் கோட்ட எல்லையில் மாற்றம் எதுவும் ஏற்படாது என்றும் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

**5.** நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையிலான திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையின் அடிப்படையிலும், பொதுமக்கள் நலன் மற்றும் நிருவாக நலன் கருதியும், முசிறி வட்டத்திலுள்ள புத்தனாம்பட்டி, வெள்ளக்கல்பட்டி, அபினிமங்கலம் மற்றும் கோட்டாத்தூர் ஆகிய கிராமங்களை துறையூர் வட்டத்துடன் இணைத்து உரிய அரசாணை வெளியிடுமாறு முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

**6.** சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையின் உத்தரவின் அடிப்படையில் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையுடன்கூடிய முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அவரிகளின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டத்திலுள்ள புத்தனாம்பட்டி, வெள்ளகல்பட்டி, அபினிமங்கலம் மற்றும் கோட்டாத்தூர் ஆகிய வருவாய் கிராமங்களை மீண்டும் துறையூர் வட்டத்துடன் இணைக்கலாம் என முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சந்தர மோகன், B.**
*அரசு செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.